# மக்களால் மக்களுக்கான
# சமூக மீளுகையில் நீர் வளங்காப்பு

**Community led initiatives on water conservation for building resilience**

## மதுரை கூடலரங்கம் 2017

தமுக்கம் மைதானம், மதுரை
செப்டம்பர் 24, 2017



ஊக்கம்

Hindustan Unilever Limited

ஆக்கம்

தானம் மக்கள் கல்வி நிலையம்

## பின்னணி

*'நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்*

*கலந்த மயக்கம் உலகம்'* (தொல்காப்பியம்; பொ.மரபு; 644)

இந்த உலகம் இயற்கையால் இயக்கப்படுகிறது என்பதை தொல்காப்பிய வரிகள் எடுத்துரைக்கிறது. நீராதாரம் ஐம்பெரும்பொருட்களில் ஒன்றாக இருக்கிறது. வாழ்வின் ஆதாரமாயிருக்கும் நீர், மனித குல மாட்சிக்கும் வீழ்ச்சிக்கும் மீண்டெழலுக்கும் ஆணிவேராகவும் இருந்திருக்கிறது. இன்று காணும் நம் தொன்மைச் சமூகம் காலத்தின் வழியிலெல்லாம் ஏற்றம், ஏமாற்றம், தடுமாற்றம், முன்னேற்றம் என மாறி மாறி வந்ததிருப்பதை நாம் வரலாற்றின் வாயிலாக அறிகிறோம்.

வறட்சியும் வெள்ளமும் நம் சமூகத்தின் வாழ்வாதாரத்தில் வந்துகொண்டே இருந்துள்ளது. இவற்றிலிருந்து கற்றுக்கொண்டு, சமூகம் மீண்டெழ, சூழலைச் சார்ந்த வாழ்க்கை முறையை மேற்கொண்டனர் நம் முன்னோர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை திணை புரிதலும் திணைகளை சார்ந்த சமூக கட்டமைப்பும் இவ்வகை சமூக மீளுகைக்கான வெளிப்பாடாகவே இருந்து வந்துள்ளது. இன்றைக்கும் இவ்வகை திணை வகைப்பாடு மிகப் பொருத்தமாகவும், நம் அன்றாட வாழ்வின் உரைகல்லாகவும் இருந்து வருகிறது. பாலை என்ற நிலமே முல்லையும் மருதமும் வறட்சிக் காலத்தில் திரிந்த நிலப்பரப்பு என்பதை இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன. ஆக, எதிர்பாரா இழப்புகள், பேரிடர்கள் ஆகியவை புதிதல்ல என்பதும் அவ்வகை இடர்களின் போது நமது மூத்தோர் பாடம் கற்று அதனைச் சார்ந்த பெரும் ஞானத்தை நமக்கு விட்டுச் சென்றிருக்கின்றனர் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

## மீளுகையும் நீர் வளங்களும்




குறிஞ்சி நீர்வளங்களுக்கான தோற்றுவாயாக விளங்கியிருந்தன. முல்லையும் மருதமும் நீர் வளங்களை பயன்படுத்தின. நீர் வளங்களை முறையாக பயன்படுத்தி மேலாண்மை செய்த நிலம் மருதமாகும். நெய்தல் நிலம் நீர்வளங்கள் கடலில் கலக்கும் முகத்துவாரமாக அமைந்து நிலம் சார்ந்த பருவநிலை சமப்படுத்தலில் பெரும் பங்கு வகிக்கிறது. பாலை நிலம் மழைபொய்த்த வறட்சி காலத்தின் தன்மையை எடுத்துக்கூறி அதற்கேற்ப மக்கள் தம் வாழ்க்கை முறையை தகவமைத்துக்கொள்ளுதலின் தேவையை விளக்குகிறது.

நம் முன்னோர்கள் எண்ணற்ற நீர்நிலைகளை உருவாக்கி வைத்துள்ளனர் என்பதை நீர்நிலைகளுக்கு அவர்கள் இட்ட பெயர்களே உணர்த்தும். ஆறு

ம லை க ளி லி ரு ந் து ஊற்றெடுத்து பெருகி ஓடுவது. மழைப்பொழிவினாலும் நீர் ஓடும். இவ்வாறு ஓடி வரும் நீரை தேக்கி பல்வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் கட்டமைப்பை இலஞ்சி என்றனர், தானே நீர் கசிந்த பகுதிகளுக்கு சுனை, கயம், பொய்கை, ஊற்று என்ற பெயர்களில் அழைத்துள்ளனர். மழை நீரின் சிறிய நீர்த்தேக்கத்தை 'குட்டை' என்றழைத்தனர். குளி(ர்)ப்பதற்கு பயன்படும் நீர்நிலைகளை 'குளம்' என்றும், உண்பதற்கு பயன்படும் நீர்நிலைகளை 'ஊருணி' என்றும், ஏர்த் தொழிலுக்கு பயன்படும் நீர்நிலைகளை 'ஏரி' என்றும், மழை நீரை மட்டுமே ஏந்தி நிற்கும் நீர்நிலைகளுக்கு 'ஏந்தல்' என்றும், கண்ணாறுகளை உடையது 'கண்மாய்' என்றும் பண்டைய தமிழர்கள் நீரின் பயன்பாடு, அதன் தன்மை அறிந்து அழைத்துள்ளனர்.

பெரிய ஏரிகளில் மழை நீரினை சேமித்து, வறட்சியின் போது பயன்படுத்த ஏந்தல்களையும், வெள்ளக் காலங்களில் நீரைத் தாங்கி வெள்ள அபாயத்திலிருந்து தம்மை காத்துக்கொள்ள தாங்கல்களையும் உருவாக்கி வறட்சியையும் வெள்ளத்தையும் தாக்குப்பிடித்துள்ளனர். இத்தோடு வறட்சி காலங்களில் நீர்ப்பற்றாக்குறையை சமாளிக்க பிள்ளைக்கிணறு குளம் அமைத்துள்ளனர். இது ஏரியின் நடுவே அமைந்த கிணறு ஆகும். இவ்வாறு சூழல் தகவமைவோடு கூடிய சமூக மீளுகையும் அதனைச் சார்ந்த நீர்வள மேலாண்மையும் நமது தொன்ம ஞானமாக இருந்துவந்துள்ளது.

## நீர் வளத்தின் இன்றைய நிலை

வாழ்வின் ஆதாரமான நீரின் இன்றைய நிலை, நமது நீர் பயன்பாடு ஆகியவற்றை காணும் போது மொத்தத்தில் வருத்தம் தான் மிஞ்சுகிறது. இயற்கை அளித்த நீரினை நாம் என்றைக்கோ வணிகம் சார்ந்த நுகர்வுப்பொருளாக மாற்றிவிட்டோம். பூமியின் உள்ள மொத்த நீர்வளத்தின் அளவு சுமார் 14,000 கோடி கனகிலோ லிட்டர் ஆகும். இதில் 75 சதவீதம், 10,500 கோடி கனகிலோ லிட்டர் நீர் கடலில் உப்பு நீராக அமைந்து நாம் பயன்படுத்தத் தகுதியற்றதாக உள்ளது. மீதம் உள்ள 3500 கோடி கன கிலோ லிட்டர் மட்டுமே உபயோகிக்கக்கூடிய நன்னீராகும். இதிலும் 2450 கோடி கன கிலோ லிட்டர் நன்னீரானது ஆர்டிக், அன்டார்டிக் மற்றும் மலைப்பிரதேசங்களில் உறைபனியாக உறைந்த நிலையில் இருக்கிறது. சுமார் 800 கோடி கன கிலோ மீட்டர் நீர் பூமிக்கடியில் நிலத்தடி நீராக அமைந்துள்ளது. இவையெல்லாம் போக எஞ்சியுள்ள சுமார் 200 கோடி கன கிலோ லிட்டர் நீராதாரம் மட்டுமே ஏரிகள், ஆறுகள் மற்றும் நீரூற்றுகள் மூலம் பெறப்படுகிறது. இவையே மனிதனின் அன்றாட நீர்த்தேவைகளை பூர்த்தி செய்வதில் மிகப்பெரும் பங்கு வகித்துவருகின்றன. ஆக, இந்தப் புவியின் மொத்த நீர்வளத்தில் நாம் பயன்படுத்தத் தக்க நீர்வளம் வெறும் 0.01 சதவீதமே ஆகும். இதிலும் இன்னும் ஆழமாக பார்த்தோமென்றால் நிலப்பரப்பு சார்ந்த பல ஏற்றத்தாழ்வுகளை நாம் உணரமுடியும்.

## இனி...

தண்ணீர் அத்தியாவசியப் பொருளாக மட்டுமில்லாமல், அருகிவரும் அரிய பொருளாவும் மாறிவரும் இந்த சூழலில் தண்ணீர் சார்ந்த பல சமூக பொருளாதார அரசியல் சிக்கல்களை நாம் நிதமும் சந்தித்து வருகிறோம். அதே சமயம், அடித்தள



அளவில் தண்ணீர் சார்ந்த நம் வாழ்வியல்முறையை நாம் மீட்டெடுத்து, சமூக மீளுகைக்கான பல முயற்சிகளை மக்கள் அமைப்புகள் முன்னெடுத்து வருவதையும் நாம் மறக்கக்கூடாது. 2000 ஆண்டுகளுக்கு முன்பே உருவான ஏரி/கண்மாய்கள் இன்றளவும் உரிய பயனை விளைவிப்பதே அதற்குச் சான்றாகும். இப் போற்றுதலுக்குரிய பணியில் மக்கள் எவ்வாறெல்லாம் அவர்களுக்காக, சூழலைச் சமைத்தார்கள் என்பதை பாருக்கு பகிர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

புலவர் உருத்திரங்கண்ணனார் நீர் சுழற்சி பற்றி அன்றே, "வான் முகந்த நீர் மழை பொழியவும், மழை பொழிந்த நீர் கடல் பரப்படும், மாரி பெய்யும் பருவம் போல், நீரின்றி நிலத்து ஏற்றவும், நிலத்தினின்று நீர் பரப்பும் அளந்தறியாப் பல பண்டம்" என குறிப்பிடுகிறார்.

அந்த நீர் சுழற்சி, இயற்கை நம் கண் முன்னே நிகழ்த்தும் அற்புதம். நம் வாழ்க்கையை மீளச் செய்வதன் ஆதாரமாக அதுவே இருக்கிறது. அதனை நமது தனிப்பட்ட குறுகிய பயன்களுக்காக பொன் முட்டையிடும் வாத்துடைய வயிற்றைக் கிழிப்பது போல நீர் ஆதாரங்களை அழித்துவருகிறோம். இனிவரும் காலங்களிலும் நாம் பேரிடர்களை சந்திக்கவேண்டியிருக்கும், எதிர்பாராமைகளில் இருந்து மீண்டுவரவேண்டியிருக்கும். அந்த மீளுகைத் தன்மை நீர்வளங்களை நாம் எவ்வாறு மதித்துப் பராமரிக்கிறோம் என்பதைப் பொருத்தே அமையும்.

ஏரிகள் போன்ற சிறு குறு நீராதாரங்கள் நிலத்தடி நீரை மேம்படுத்துவதில் இயல்பாய் ஆற்றுகின்ற பணி ஆறுகளுக்கு இணையானது. மேடுதட்டி காடாய்ப் போய்விடும் என்று கவலை கொள்கிற வேளையில்... மக்களின் வேலையால்.... இயற்கையின் வேள்வியால் மீண்டும் மீண்டும் மீள்வதை காண முடிகிறது. நீரும் ஊரும் நிலைத்திருக்க இந்த மக்கள் பணியரங்கம் பாருக்கு பகிர்ந்து கொள்வதை கடமையாகச் செய்கிறது.

இதில் ஈடுபட்ட செயல்பாட்டாளர்கள், ஈடுபாடு கொண்ட ஆர்வலர்கள் அனைவரும் பங்கேற்போம்.

*இப்பணியரங்கம் குறித்த மேலதிக தகவல்களுக்கு*


**திரு.ஜானகிராமன்.நா மற்றும் திரு. கண்ணன்.சி**
பணியரங்க ஒருங்கிணைப்பாளர்கள்,

**தானம் மக்கள் கல்வியகம்**
புல்லூத்து அஞ்சல், மதுரை 19
கைபேசி: +91 94459 95142 / +91 79042 25091
மின்னஞ்சல்: dpa@dhan.org, jk@dhan.org
இணையதளம்: http://maduraisymposium.net